# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## MCOP. No.103/2022

PW2–ராமு நாள்.25.09.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்து நடந்த சாலை ஒரே நேரத்தில் இரண்டு பேருந்துகள் செல்லும் அளவிற்கு அகலமான சாலை என்றால் சரிதான். விபத்து நடந்தது இரவு நேரம் என்றால் சரிதான். இறந்துபோனவர் எனக்கு ஏற்கனவே தெரிந்தவர். எனக்கு முன்பு சுமார் 100 மீட்டர் தூரத்தில் அவர் சென்று கொண்டு இருந்தார். அன்று முருகேசன் வீட்டில் விசேசம் என்பதால் பந்தல்போட்டு , வெளியே லைட் போட்டு இருந்தார்கள் என்றால் பந்தல் போட்டு இருந்தார்கள் லைட் போடவில்லை. ஆட்டோ முருகேசன் வீட்டிற்கு எதிர் திசையில் நின்று கொண்டிருந்தது. ஆட்டோ ரோட்டின் எந்தப்பக்கம் நின்றுகொண்டிருந்தது என்றால் ரோட்டின் பாதிஅளவுக்கு நின்று கொண்டிருந்தது. எதிரில் பொலிரோ ஜீப் வந்ததை நான் பார்த்தேன். பொலிரோ ஜீப்பை சுமார் 150 மீட்டர் தூரத்தில் பார்த்தேன். ஆட்டோ கிழக்கில் இருந்து மேற்கு நோக்கிய திசையில் நின்று கொண்டிருந்தது. ஆட்டோவின் பின்பக்கம் இறந்துபோன நபர் போய் கொண்டு இருந்தார். ஆட்டோவின் பின்பக்கம் சென்றதால் லைட் வெளிச்சத்தால் இறந்துபோனவருக்கு எந்த பாதிப்பும் இருக்காது என்றால் சரியல்ல. ஆட்டோவில் பார்கிங் லைட் போடாமல் நின்றதால் அதில் மோதிவிட்டார் என்றால் சரிதான். ஆட்டோவின் பக்கவாட்டு கதவு மற்றும் பின்புற கதவு இரும்பால் செய்யப்பட்டது என்றால் சரிதான். இறந்துபோனவர் அன்று தலைக்கவசம் போடவில்லை என்றால் சரியல்ல. மோதி வடக்குபக்கம் விழுந்தார். வெள்ளைக்கோட்டிற்கு உள்ளேயே விழுந்தார். விழுந்தவர் மீது ஜீப் மோதவில்லை என்றால் சரியல்ல. டயர் ஏறியது. அவர் கீழே கிடந்ததை நான் பார்த்தேன். தலையில் டயர் ஏறியது. நான் கூறுவது போன்று இறந்தவர் மீது டயர் ஏறி இறங்கவில்லை என்றும், அன்று விசேசம் நடந்து கொண்டிருந்ததால் அங்கு ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றால்

சரியல்ல. ரோட்டின் இரண்டுபக்கமும் வீட்டு விசேசம் காரணமாக டியூப் லைட் கட்டிஇருந்தார்கள் என்றும், அதனால் வாகனம் வெளிச்சம் காரணமாக அவருக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. ஜீப்பை மெதுவாக தான் ஓட்டிவந்தார் என்றும், அவர் கீழே விழுந்ததை பார்த்தவுடன் ஓட்டுநர் ஜீப்பை நிறுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அங்கு இருந்தவர்களுக்கு விவரம் தெரியும் என்றும், அதனால் தான் அவர்களை விசாரிக்காமல் என்னை சாட்சியாக மனுதாரர்கள் விசாரிக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், அந்த சமயத்தில் நான் அங்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.